# 6. சமூகக்காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள்

சமூகக்காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள் ஆகிய திட்டங்களை வனத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகள் மாநில, மத்திய மற்றும் அயல் முகமை நிதி உதவியுடன் செயல்படுத்தி வருகிறது. 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் பிரிவுகள் 120, 121, 131 மற்றும் 245ல் பாதுகாக்கப்படாத காடுகள் தொடர்பில், கிராம ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியத்திற்கும் சில அதிகாரங்களை அளித்துள்ளது. மேற்படி சட்டம், பிரிவு 13 (உ) மற்றும் (ஊ)ன்படி ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த பொது சாலைகள் அல்லது புறம்போக்கு நிலத்தில் உள்ள மரங்களை வெட்டவோ, அழிக்கவோ, மரப்பட்டைகளை உரிக்கவோ, இலைகள், பழங்களை எடுக்கவோ ஊராட்சிகள் ஒழுங்குபடுத்தியுள்ளது. மேலும் சமூக காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள் வளர்த்தல், பராமரித்தல் போன்ற பணிகளில் என்னென்ன உரிமைகள் பொறுப்புகள் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளுக்கு வழங்கலாம் என்பது குறித்து ஆராய்ந்த குழு கீழ்கண்டவாறு பரிந்துரைகளை செய்கிறது.

## கிராம ஊராட்சிகள்.

1. சமூகக் காடுகளையும் பண்ணைக் காடுகளையும் மேம்படுத்தவும் உயிரின வாழ்க்கையும் சுற்றுப்புறச் சூழலையும் மேம்படுத்தும் திட்டமாக சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள் பராமரிப்பு பற்றி செய்தி பரவச் செய்தல். சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக் காடுகளுக்காக,, சமுதாயக் தரங்குறைந்த தரிசு நிலங்களைக் கண்டறிந்து, இத் திட்டங்களை செயல்படுத்தல்.

2. பங்கிடல் அடிப்படையில் ஆர்வமுள்ள தனியார் குழுவினருக்கு ஊராட்சிக்குச் சொந்தமான நிலங்களை குத்தகைக்கு விடுதல் மற்றும் குத்தகைக் கட்டணம் வசூலித்தல்.

3. உள்ளூருக்கு ஏற்ற வகையில் எரிபொருள், தீவனம் மற்றும் வீடுகட்ட பயன்படுத்தப்பெறும் மரக்கட்டை உற்பத்தி செய்யும் செடிகளைக் கண்டறிந்து, அவற்றை மேம்படுத்துதல். விற்பனைக்கு ஏற்பாடு செய்தல். பண்ணைக்காடுகளின் கீழ் நாற்றங்கால்களையும் மலைத்தோட்டம் எடுப்பதற்கு தனியார் விவசாயிகளை ஊக்கப்படுத்தி தேவையான

நாற்றுகளையும், மரக்கன்றுகளையும் வழங்குதல்.

4. சமூக மற்றும் பண்ணைக் காடுகள், மலைத் தோட்டக் சூழ்மரம் , பல்வேறு பொதுத்துறை நிறுவனங்கட்கும் அரசுத் துறைகளுக்கும் தோட்டப் பயிர்களுக்கான விதைகளையும், செடிகளையும் இலவசமாக வழங்குதல், மூங்கில் பண்ணைகளை அமைத்தல், பழங்குடிப் பகுதிகளில் பயிர்களை வளர்த்தல், பழங்குடிப் பகுதிகளில் பள்ளிக் கட்டங்களை கட்டுதல், வனச்சாலைகள் அமைத்தல், மக்கள் நாற்றங்கால்களை நிறுவுதல் , ஊரக வளர்ச்சித் துறையில் சமூகக் காடுகள் திட்டம் , வேளாண்மைத் துறையின் தேசிய தரிசு நில மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பண்ணைக்காடுகள் திட்டங்களில் பயனாளிகளைக் கண்டறிதல்.

5. பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களுக்கும் அரசுத் துறைகளுக்கும் தோட்டப் பயிர்களுக்கான விதைகளையும் செடிகளையும் வழங்குதல் மற்றும் சமூக தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் ஊராட்சி அதிகாரத்தில் உள்ள சாலைகளில் நிழல்தரும் மரங்களை அமைத்து பேணுதல் திட்டம் ஆகியவற்றினை செயல்படுத்துதல்.

6. வெளிநாட்டு உதவி மற்றும் மத்திய, மாநில உதவியுடன் செயல்படுத்தப்படும் காடுகள் வளர்ப்பு திட்டத்தை செயல்படுத்தும்போது சம்பந்தப்பட்ட ஊராட்சிகள் அடங்கிய குழு திட்ட செயல்பாட்டை கண்காணிக்கும் குழுவாக செயல்பட உரிய வழிவகை செய்யப்பட வேண்டும்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1.சமூகக் காடுகளையும் பண்ணைக் காடுகளையும் மேம்படுத்துதல், உயிரின வாழ்க்கையையும், சுற்றுப்புறச் சூழலையும் மேம்படச் செய்ய சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக் காடுகளை மேம்படுத்தி, அதைப் பற்றி செய்திப் பரவச்செய்தல்.

2.சமுதாயத்தில் தரம் குறைந்த தரிசு நிலங்களைக் கண்டறிந்து, அவற்றில் இத்திட்டம் மேம்படச் செய்யவும், அரசாலும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையாலும் அவ்வப்போது வழங்கும் பணிகளையும் செவ்வனே செய்தல்.

3.ஊராட்சி ஒன்றிய சாலைகள், மற்றும் பொது இடங்களில் தேவையான மரங்களை நடச் செய்தல்.

4. சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள் திட்டங்களுக்குத் தேவையான நாற்றுக்களையும் மரக்கன்றுகளையும் உற்பத்தி செய்து வழங்குதல்.

5.எரிபொருள், தீவனம் மற்றும் வீடு கட்ட பயன்படும் மரங்களைப் பற்றிக் கிராம மக்கள் அறியுமாறு செய்தி பரவச் செய்தல் மற்றும் விற்பனைக்கும் ஏற்பாடு செய்தல்.

6.தனது கட்டுப்பாட்டின் கீழ் வரும் ஊராட்சிகளுக்கும் பொதுமக்களுக்கும் நாற்றுக்களையும் மரக்கன்றுகளையும் வழங்க நாற்றங்கால்கள் அமைத்தல்.

7. வனம், வேளாண்மை, வருவாய் மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளினால் செயல்படுத்தப்பட்டு வரும் சமூக பண்ணைக் காடுகள் திட்டங்கள் அனைத்தையும் ஆய்வு செய்தல். (வனக்காப்பாளர்கள், வட்டாட்சியர், வேளாண்மை துறை உதவி இயக்குநர் இவ்ஆய்வில் கலந்து கொள்ளலாம்).

8. தமிழ் நாடு வேளாண்மை சார்ந்த மேம்பாட்டுத் திட்ட சமூகக் காடுகள், சூழலியல் மற்றும் சுற்றுப்புறம் ஆகியவற்றைப் பாதுகாப்பததற்கான விழிப்புணர்வுகளை உருவாக்குதல் மற்றும் அரிய மரவடை, மரவடை, ஆகியவற்றைப் பாதுகாப்பதற்கு உதவுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

9. சமூக மற்றும் பண்ணைக் காடுகள் திட்டம், மலைத் தோட்டக் கூழ்மரம், தமிழ் நாடு வேளாண்மை சார்ந்த மேம்பாடு திட்ட சமுகக் காடுகள், பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களுக்கும் அரசுத் துறைகளுக்கும் தோட்டப்பயிர்களுக்கான விதைகளையும் செடிகளையும் வழங்குதல், மரம் பயிரிடுதல், பழங்குடிப்பகுதிகளில் பயிர்களை வளர்த்தல், பழங்குடிப் பகுதிகளில் பள்ளிக் கட்டங்களைக் கட்டுதல், வனச் சாலைகளை அமைத்தல், ஊரக வளர்ச்சித் துறையின் வெளிநாட்டு உதவித் திட்டம் ஆகியவற்றின் கீழ் சமூகக் காடுகள் திட்டம் , வேளாண் துறையின் தேசிய தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பண்ணைக்காடுகள் திட்டம், ஊராட்சி ஒன்றிய மற்றும் ஊராட்சி

அதிகாரத்தில் உள்ள சாலைகளில் நிழல் தரும் மரங்களை அமைத்து பேணுதல் திட்டம் போன்ற திட்டங்களை செயல்படுத்துதல்.

10. ஊராட்சி ஒன்றியங்கள் சமூக தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மக்கள் நாற்றங்கால்களை நிறுவுதல் ஆகிய பணிகளை மேற்பார்வையிடல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. சமூகக் காடுகள் மற்றும் பண்ணைக் காடுகள் மேம்பாட்டு நடவடிக்கைகளில் மாவட்டத்தின் செயல்திறத்தை மதிப்பிடுதல்.

2. அரசு சார்பற்ற தொண்டு நிறுவனங்கள் மற்றும் துறைத்தலைமை அலுவலங்கள் மூலமாக செயல்படுத்துவதற்கான தேவையான திட்டங்களையும், செயல்முறை ஏற்பாடுகளையும் தயாரித்தல்.

3. நிதிகளுக்கு ஏற்பளித்து, ஒப்பளிப்பு செய்ததற்கேற்ப, தீர்மானிக்ககப்பட்ட சமூகக் காடுகள் திட்டங்களை தொகுத்தல் பணி.

4. சமூக தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் திட்டமிடல்.

5. அனைத்து சமூக மற்றும் பண்ணைக் காடுகள் திட்டங்கள் அனைத்தையும் வேளாண்மை நிலைக்குழுவின் மூலமாக காலமுறையாக மூன்று மாதத்திற்கொரு முறையும் மற்றும் மூங்கில் பண்ணைகளை அமைத்தல் , சமூக தரிசு நில மேம்பாட்டு திட்டம் , ஊசியிலைக்காடுப் பயிர்கள் , மரம் பயிரிடுதல், பழங்குடிப் பகுதிகளில் பயிர்களை வளர்த்தல் மற்றும் பழங்குடிப் பகுதிகளில் பள்ளிக் கட்டிடங்களைக் கட்டுதல், வனச் சாலைகளை அமைத்தல் ஆகியவற்றை ஆய்வு செய்தல்.

6. மாவட்டத்தின் சமூக மற்றும் பண்ணைக் காடுகள் மேம்பாட்டின் இடர்பாடுகளையும், வாய்ப்பு வளங்களையும் பற்றி அரசுக்கு கருத்து தெரிவித்தல்.

7. பழங்குடிப் பகுதிகளில் பள்ளிக் கட்டடங்களைக் கட்டுதல் வனச்சாலைகளை அமைத்தல் ஆகிய பணிகளை மேற்பார்வையிடுதல்.